# செய்து காட்டி விளக்குதல் – 5

மாணவ ஆசிரியர் பெயர் : அ. சுசீலா

செய்து காட்டி விளக்குபவர் பெயர் : திருமதி. உ. விசாலாட்சி
துணைப் பேராசிரியர்

வகுப்பு : எட்டாம் வகுப்பு

பாடம் : தமிழ்

பாடத் தலைப்பு : தமிழர் இசைக் கருவிகள்

கால அளவு : 45 நிமிடங்கள்

தேதி : 29.7.2022

மாணவர்களின் எண்ணிக்கை : 30

## பாடத்தின் நோக்கம்:-

ஆசிரியர் மாணவர்களுக்கு தம்முடைய இசைக் கருவிகள் பாடத்தின் முக்கியத்துவம் பற்றியும் சிறப்பு அம்சங்கள் பற்றியும் விளக்கினார். இசைக் கருவிகளின் வகைகளைப் பற்றியும் சிறப்புகளைப் பற்றியும் ஆசிரியர் விளக்கிக் கூறினார்.

## தயார்படுத்துதல்:-

ஆசிரியர் சில வினாக்கள் கேட்டு மாணவர்களை ஆயத்தப்படுத்தினார். அவரது வினாக்கள் மாணவர்களின் முன்னறிவை சோதிக்கும் வகையிலும் பாடத்துடன் தொடர்பு உடையதாகவும் இருந்தது.

### உதாரணம்:-

1. இசை என்றால் என்ன?
2. இசைக் கருவிகளின் வகைகளைக் கூறு?
3. இசைக் கருவிகள் பயன்படுத்தப் படும் இடங்களைக் கூறு?

## பாடத்தை வழங்கிய விதம் :-

ஆசிரியர் இசைக் கருவிகள் தோல் கருவி, நரம்புக் கருவி, காற்றுக் கருவி, கஞ்சக் கருவி என நான்கு வகைப்படும் எனக் கூறி விளக்கினார்.

## பாடப் பொருள் :-

ஆசிரியர் ஒவ்வொரு இசைக் கருவிக்கும் சில எடுத்துக்காட்டுகளை கூறி விளக்கினார்.

தோல் கருவிகள் - மிருதங்கம், முரசு

நரம்புக் கருவிகள் - யாழ், வீணை

காற்றுக் கருவிகள் - குழல், சங்கு

கஞ்சக் கருவிகள் - தாளம், சேகண்டி என்று விளக்கிக் கூறினார்.

## செய்முறை :-

ஆசிரியர் விளக்கப்படத்தின் மூலமாக தோல் கருவிகள் வகைகளை மாணவர்களுக்கு எளிமையாக முறையில் கூறி விளக்கினார்.

பயன்படுத்துதல்:-

ஆசிரியர் ஒவ்வொரு இசைக் கருவியைப் பற்றி கூறி விளக்கியது எங்களுக்கு மிகவும் பயன் அளித்தது. மேலும் இசைக் கருவிகள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றியும் தெளிவாக விளக்கி கூறினார்.

கரும்பலகை வேலை:-

ஆசிரியர் இசைக் கருவிகள் சிலவற்றை கரும்பலகையில் வரைந்து அவற்றின் பெயர்களை கேட்டு மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தினார்.

வினாக் கேட்டல்:-

மாணவர்களிடம் கற்பித்தலின் இடையே வினாக்களை கேட்டு மாணவர்களின் கவனம் சிதறாமல் அவர்களின் எண்ணத்தை தூண்டும் விதமாக ஆசிரியரின் வினாக்கள் இருந்தன. மாணவர்களின் வினாக்களுக்கு சரியான பதிலை அளித்தனர்.

வகுப்பறை மேலாண்மை :-

வகுப்பறை வெளிச்சமாகவும் நல்ல காற்றோட்டமாகவும் இருந்தது. மாணவர்களுக்கு தேவையான மேசை நாற்காலிகள் போடப்பட்டு மாணவர்கள் வரிசையாய் அமர்ந்து இருந்தனர்.

ஆசிரியரின் ஆளுமை :-

ஆசிரியரின் குரல் தகுந்த இடங்களில் ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டது. வார்த்தைகளின் உச்சரிப்பும் மிகத் தெளிவாக இருந்தது ஆசிரியரின் பேச்சும், கையின் அசைவுகளும் அனைத்து மாணவர்களின் கவனத்தையும் ஒன்றாக ஈர்க்கும் வகையில் இருந்தது.

தொடர் செயல்பாடு :-

ஆசிரியர் பாட முடிவில் சில வினாக்களை கொடுத்து படித்துக் கொண்டு வருமாறு கூறினார்

ஆ. சுசீலா

துணை பேராசிரியர் கையொப்பம்

மாணவ ஆசிரியர் கையொப்பம்

COMPLETED